# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.4** **Date : 12.04.2024**

| | |
|---|---|
| **Name : கோவிந்தன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குதிரைக்காரனூரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்துபோனவர் எனது மகன் ராஜகுமார் ஆவார். கடந்த 2016 ம் வருடம் மாலை 04.30 மணிக்கு நான் மற்றும் 15 க்கும் மேற்பட்டவர்கள் எனது மகன் உட்பட மகேந்திரா பிக்அப் வண்டியில் வினாயகர் சிலை கரைக்கவேண்டி கூணான்டியூர் சென்று சிலையை கரைத்துவிட்டு பிறகு திரும்ப மேச்சேரி நோக்கி வந்தபோது உப்புபள்ளம் அருகில் வந்தபோது பிக்அப் வேன் ஓட்டுனர் மயில்சாமி வேகமாக ஓட்டிவந்து கவனக்குறைவாக செயல்பட்டதில் வண்டி இடது பக்கம் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது.

2. நான் வாகனத்தின் நடுவே நின்றுகொண்டிருந்தேன். நாங்கள் அனைவரும் வாகனத்தை மெதுவாக ஓட்டச்சொன்னோம். ஆனால் மயில்சாமி வேகமாக மேச்சேரி நோக்கி வந்தபோது அவருடைய கவனகக்குறைவால் விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக கார்த்தி என்பவருக்கும் ராஜ் குமார் என்பவருக்கும் தலையில் காயம் ஏற்பட்டு ஆமபுலன்ஸ் மூலமாக சேலம் மணிப்பால் மருத்துவமனைக்கு கொண்டுசென்றபோது இருவரும் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டனர்.

3. கார்த்திக் என்பவர் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டார். விபத்தின் காரணமாக எனக்கு கை, கால் ஆகிய பகுதிகளில் இலேசான காயம் ஏற்பட்டது. நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4. யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் எனகு தெரியாது. எனது மகன் அடிப்பட்டதால் நான் பதற்றமாக இருந்தேன். பிக்அப்வேன்னில் எத்தனை பேர் இருந்தோம் என்றால் 20 பேர் இருந்தோம். ஒரு சரக்கு வாகனத்தில் 20 பேர் பயணம் செய்வது தவறு என்றால் சரிதான். இறந்துபோன ராஜ்குமார் மற்றும் கார்த்தி இருவரும் என்னுடன் வண்டியின் பின்பக்கத்தில் தான் உட்கார்ந்திருந்தார்கள். சரவணன் என்பவர் எங்களுடன் பயணித்தார்களா என்றால் நான் கவனிக்கவில்லை.

5. நான் வண்டியின் பின்னால் நின்று கொண்டு வந்தேன் என்றால் ஆமாம். நான் வேகமாக பிக்அப் வேனை ஓட்டவேண்டாம் என நான் சொல்லவில்லை என்றால் நான் பாடியை தட்டி சொன்னேன். நான் ஓட்டுனரின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஓட்டுனர் மிதமான வேகத்தில் சென்றார் என்றால் இல்லை. மிதமான வேகத்தில் சென்றபோது நான் வேகமாக செல்லக்கூடாது என்று சொன்னேன் என்றால் ஆமாம்.

6. விபத்து நடைபெற்ற பகுதி வளைவான பகுதி என்றால் சரிதான். சரவணன் என்பவர் உறவினர் வருகிறார் என்று எட்டி குதித்தார் என்றால் இல்லை. எட்டி குதித்த சமயத்தில் வண்டியில் இருந்த அனைவரும் ஒரே பக்கமாக சென்று

நின்ற நிலையில் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. நாங்கள் நஷ்டஈடு பெற்றுவிட்டோம் என்றால் அம்மா நிதியிலிருந்து பெற்றோம்.

7. இது சம்மந்தமாக விபத்து இழப்பீடு கோரிய வழக்கு சார்வு நீதிமன்றத்தில் நடைபெறுகிறது என்றால் அந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. அதிகபடியான நபர்கள் ஏற்றியதற்காக நான் அபராதம் செலுத்தினேனா என்றால் இல்லை. விபத்து நடக்கும்போது காயம் பட்டநிலையில் தான் இறந்தவர்கள் இருந்தார்கள் என்றால் எனது மகன் இறந்துபோய்விட்டார். கார்த்தி சிறிது நேரம் கழித்துதான் இறந்தார்.

8. இறந்துபோனது எனது மகன் என்பதால் நான் நஷ்டஈடு பெற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.5** **Date : 12.04.2024**

| | |
|---|---|
| **Name : ஏழுமலை** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குறுக்குப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்துபோனவர் எனது மகன் கார்த்தி ஆவார். கடந்த 05.09.2016 ம் தேதியன்று மாலை 04.30 மணிக்கு நான் மற்றும் 18 க்கும் மேற்பட்டவர்கள் எனது மகன் உட்பட பிக்அப் வண்டியில் வினாயகர் சிலை கரைக்கவேண்டி கூணான்டியூர் கீரைக்காரனூர் சென்று சிலையை கரைத்துவிட்டு பிறகு திரும்ப மேச்சேரி நோக்கி வந்தபோது உப்புபள்ளம் அருகில் வந்தபோது, முதலில் மெதுவாக வந்து பின்னர் வேகமாக ஓட்டி இரண்டு வாகனத்தை முந்திச்சென்று வேகமாக போனபோது பிக்அப் வேன் ஓட்டுனர் மயில்சாமி வேகமாக ஓட்டிச்சென்று இடது பக்கம் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது.

2. நான் வாகனத்தின் நடுவே உட்கார்ந்து கொண்டிருந்தேன். விபத்தின் காரணமாக கார்த்தி என்பவருக்கும் தலை, உதடு தாடையில் காயம் ஏற்பட்டு ஆமபுலன்ஸ் மூலமாக சேலம் மணிப்பால் மருத்துவமனைக்கு கொண்டுசென்று பிறகு அரசு மருததுவமனைக்கு கொண்டு செல்லும்பபோது சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டனர்.

3. விபத்தின் காரணமாக எனக்கு வலது கை இரண்டாக உடைந்துவிட்டது. நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. எனது மகன் துக்கத்தால் மருத்துவமனைக்கு செல்லவில்லை. எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. ஈமகாரியம் முடித்த பிறகு மணிப்பால்

மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று அதன் பிறகு நாட்டுவைத்தியம் பார்த்து சரிசெய்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4. வண்டியில் எத்தனை பேர் சென்றோம் என்றால் 18 பேர் சென்றோம். ஆரம்ப நிலையில் ஓட்டுனர் மெதுவாக தான் சென்றார் என்றால் ஆமாம். விபத்து நடந்த இடம் இறக்கமான இடம் என்றால் இல்லை. ஓட்டுனர் வேகமாக செல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடைபெற்ற பகுதி வளைவான பகுதி என்றால் இல்லை.. சரவணன் என்பவர் உறவினர் வருகிறார் என்று எட்டி குதித்தார் என்றால் இல்லை. எட்டி குதித்த சமயத்தில் வண்டியில் இருந்த அனைவரும் ஒரே பக்கமாக சென்று நின்ற நிலையில் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை.

5. நாங்கள் நஷ்டஈடு பெற்றுவிட்டோம் என்றால் அம்மா நிதியிலிருந்து ரூ.1,00,000/– பெற்றோம். இது சம்மந்தமாக விபத்து இழப்பீடு கோரிய வழக்கு சார்வு நீதிமன்றத்தில் நடைபெறுகிறது என்றால் ஆமாம். முதலில் நாங்கள் 4 பேர் தான் ஏறினோம். ஓட்டுனர் தான் அனைவரையும் ஏறுமாறு சொன்னார் ஓட்டுனர் யாரையும் ஏற வேண்டாம் என்று சொல்லசொல்ல நாங்கள் ஏறினோம் என்றால் ஓட்டுனர் என்னிடம் சொல்லவில்லை.

6. இறந்துபோனது எனது மகன் என்பதால் நான் நஷ்டஈடு பெற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களுடைய தவறால் அதிகபடியான நபர்கள் ஏறியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ஓட்டுனர் மிதமான வேகத்தில் சென்றார் என்றும் நாங்கள் அதிகபடியான நபர்கள் பயணம் செய்யதால் இந்த விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.6** **Date : 12.04.2024**

| | |
|---|---|
| **Name : மலர்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் செங்காட்டூரில் குடியிருந்து விவசாய வேலை செய்கிறேன். அ.சா.5 எனது கணவர் ஆவார். விபத்தில் இறந்துபோனவர் எனது மகன் கார்த்தி ஆவார். கடந்த சுமார் 8 வருடங்களுக்க முன்பாக எனது கணவர் மற்றும் 25 க்கும் மேற்பட்டவர்கள் எனது மகன் உட்பட பிக்அப் வண்டியில் வினாயகர் சிலை கரைக்கவேண்டி கூணான்டியூர் கீரைக்காரனூர் சென்று சிலையை கரைத்துவிட்டு பிறகு திரும்ப மேச்சேரி நோக்கி வந்தபோது உப்புபள்ளம் அருகில் வந்தபோது, எதிரி வேகமான வண்டியை ஓட்டு கவிழ்த்துவிட்டதால் விபத்து ஏற்பட்டது.

2. விபத்தின் காரணமாக எனது மகன் கார்த்தி மற்றும் ராஜ்குமார் என்பவருக்கும் தலை, உதடு தாடையில் காயம் ஏற்பட்டு ஆமபுலன்ஸ் மூலமாக சேலம் மணிப்பால் மருத்துவமனைக்கு கொண்டுசென்று பிறகு அரசு மருததுவமனைக்கு கொண்டு செல்லும்பபோது சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டனர். இந்த விபத்திற்கு ஓட்டுனர் மயில்சாமி என்பவர் தான் என்பதை தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—**

4. விபத்து நடைபெற்ற வாகனத்தில் நான் செல்லவில்லை என்றால் சரிதான். விபத்து சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.7** **Date : 12.04.2024**

| | |
|---|---|
| **Name : சுப்ரமணி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குறுக்கத்தியான் வளவில் குடியிருந்து கைத்தறி வேலை செய்கிறேன். கடந்த சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக நான் உட்பட 18 க்கும் மேற்பட்டவர்கள் ஈச்சர் வண்டியில் வினாயகர் சிலை கரைக்கவேண்டி கூணான்டியூர் கீரைக்காரனூர் சென்று சிலையை கரைத்துவிட்டு பிறகு திரும்ப மேச்சேரி நோக்கி வந்தபோது, எதிரி வேகமான வண்டியை ஓட்டு கவிழ்த்துவிட்டதால் விபத்து ஏற்பட்டது.

2. விபத்தின் காரணமாக எனக்கு வயிற்றில் உள்பகுதியில் காயம் எற்பட்டது. இந்த விபத்தில் கார்த்தி மற்றும் ராஜ்குமார் என்பவருக்கும் காயம் ஏற்பட்டு ஆமபுலன்ஸ் மூலமாக கொண்டு செல்லும்பபோது சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டனர். நான் சேலம் நீயுரோ மருததுவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுவிட்டு பிறகு சேலம் அரசு மருதுதுவமனைக்கு சென்றேன். இந்த விபத்திற்கு ஓட்டுனர் மயில்சாமி என்பவர் தான் என்பதை தெரிந்து கொண்டேன். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

4. விபத்து நடந்த பகுதி வளைவான பகுதியா என்றால் ஆமாம். அது இறக்கமான பகுதிய என்றால் மேடான பகுதி ஆகும். ஓட்டுனர் ஏற வேண்டாம் சொன்னபிறகு நாங்களாகவே ஏறிச்சென்றோம் என்றால் இல்லை. வாகனத்தில் நெறிசலாக பயணம் செய்தோம் என்றால் இல்லை. நான் உட்கார்ந்து பயணம் செய்ததால் சாலையை பார்க்க வாய்ப்பில்லை என்றால் ஆமாம். சரவணன் என்பவர் உறவினர் வருகிறார் என்று எட்டி குதித்தார் என்றால் இல்லை. எட்டி குதித்த சமயத்தில் வண்டியில் இருந்த அனைவரும் ஒரே பக்கமாக சென்று நின்ற நிலையில் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை.

5. ஏழுமலை மற்றும் கோவிந்தன் இருவரும் எனது உறவினர்கள் என்றால் ஆமாம். வண்டியில் இருந்தவர்கள் மதுபோதையில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. வண்டியின் எண் தெரியாது சம்பவம் நடைபெற்ற தேதியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஓட்டுனர் மிதமான வேகத்தில் சென்றார்கள் என்றும் நாங்கள் அதிகபடியாக ஏறியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.8** **Date : 12.04.2024**

| | |
|---|---|
| **Name : சரவணன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குறுக்கத்தியான் வளவில் குடியிருந்து கைத்தறி வேலை செய்கிறேன். கடந்த சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக நான் உட்பட 18 க்கும் மேற்பட்டவர்கள் பிக்அப் வண்டியில் வினாயகர் சிலை கரைக்கவேண்டி கூணான்டியூர் கீரைக்காரனூர் சென்று சிலையை கரைத்துவிட்டு பிறகு திரும்ப மேச்சேரி நோக்கி வந்தபோது , உப்புபள்ளம் என்ற இடத்தில் எதிரி வேகமான வண்டியை ஓட்டியதால் கவிழ்த்துவிட்டதால் விபத்து ஏற்பட்டது.

2. விபத்தின் காரணமாக எனக்கு கன்னத்தில் காயம் எற்பட்டது. பிறகு பல் நான்கு இழந்துவிட்டேன். எனது இடது கை எலும்பு முறிவு ஏற்பட்டது. இந்த விபத்தில் கார்த்தி மற்றும் ராஜ்குமார் என்பவருக்கும் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் சேலம் கமலா மருததுவமனைக்கு சென்று 20 நாட்கள் சிகிச்சை பெற்றேன். இந்த விபத்திற்கு ஓட்டுனர் மயில்சாமி என்பவர் தான் என்பதை தெரிந்து கொண்டேன். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை

செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4. விபத்து நடந்த பகுதி வளைவான பகுதியா என்றால் ஆமாம். அது இறக்கமான பகுதிய என்றால் ஆமாம். ஓட்டுனர் ஏற வேண்டாம் சொன்னபிறகு நாங்களாகவே ஏறிச்சென்றோம் என்றால் இல்லை. வாகனத்தில் நெறிசலாக பயணம் செய்தோம் என்றால் இல்லை. நான் உட்கார்ந்து பயணம் செய்ததால் சாலையை பார்க்க வாய்ப்பில்லை என்றால் ஆமாம். சரவணன் என்பவர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது உறவினர் வருகிறார் என்று நான் எட்டி குதித்தேன் என்றால் இல்லை. எட்டி குதித்த சமயத்தில் வண்டியில் இருந்த அனைவரும் ஒரே பக்கமாக சென்று நின்ற நிலையில் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை.நான் எட்டி குதிக்கவேயில்லை.

5. ஏழுமலை மற்றும் கோவிந்தன் இருவரும் எனது உறவினர்கள் என்றால் ஆமாம். வண்டியில் இருந்தவர்கள் மதுபோதையில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. ஓட்டுனர் மிதமான வேகத்தில் சென்றார்கள் என்றும் நாங்கள் அதிகபடியாக ஏறியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.9** **Date : 12.04.2024**

| | |
|---|---|
| **Name : அஜித்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குறுக்கத்தியான் வளவில் குடியிருந்து தறி வேலை செய்கிறேன். கடந்த 05.09.2016 தேதி அன்று மாலை 04.00 மணிக்கு மேல் நான் உட்பட 16 பேர் பிக்அப் வண்டியில் வினாயகர் சிலை கரைக்கவேண்டி கூணான்டியூர் கீரைக்காரனூர் சென்று சிலையை கரைத்துவிட்டு பிறகு திரும்ப மேச்சேரி நோக்கி வந்தபோது, உப்புபள்ளம் என்ற இடத்தில் எதிரி அதிவேகமான வண்டியை ஓட்டியதால், நாங்கள் கத்திய பின்னரும் நிறுத்தாமல் வேமகமாக சென்ற கவிழ்த்துவிட்டதால் விபத்து ஏற்பட்டது.

2. விபத்தின் காரணமாக எனக்கு இடது தோள்பட்டை, முக்கு, ஆகிய பகுதிகளில் காயம் எற்பட்டது. இந்த விபத்தில் கார்த்தி மற்றும் ராஜ்குமார் என்பவருக்கும் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் சேலம் நீயூரோ மருததுவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். இந்த விபத்திற்கு ஓட்டுனர் மயில்சாமி என்பவர் தான் என்பதை தெரிந்து கொண்டேன். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்

இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

4. விபத்து நடந்த பகுதி வளைவான பகுதியா என்றால் இல்லை. அது இறக்கமான பகுதிய என்றால் சமமான பகுதி ஆகும். ஓட்டுனர் ஏற வேண்டாம் சொன்னபிறகு நாங்களாகவே ஏறிச்சென்றோம் என்றால் இல்லை. வாகனத்தில் நெறிசலாக பயணம் செய்தோம் என்றால் ஆமாம். நான் உட்கார்ந்து பயணம் செய்ததால் சாலையை பார்க்க வாய்ப்பில்லை என்றால் ஆமாம். சரவணன் என்பவர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவரது உறவினர் வருகிறார் என்று அவர் எட்டி குதித்தபோது வண்டியில் இருந்த அனைவரும் ஒரே பக்கமாக சென்று நின்ற நிலையில் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை.

5. வண்டியில் இருந்தவர்கள் மதுபோதையில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. ஓட்டுனர் மிதமான வேகத்தில் சென்றார்கள் என்றும் நாங்கள் அதிகபடியாக ஏறியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சரக்கு வாகனத்தில் பயணம் செய்யக்கூடாது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வினாயகர் சிலை உள்ளதால் ஏறினேன். நாங்கள் 20 பேர் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. 16 பேர் மட்டுமே பயணம் செய்தோம்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.10** **Date : 12.04.2024**

| | |
|---|---|
| **Name : தமிழரசன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குறுக்கத்தியான் வளவில் குடியிருந்து தறி வேலை செய்கிறேன். கடந்த 05.09.2016 தேதி அன்று மாலை 04.00 மணிக்கு மேல் நான் உட்பட 18 பேர் பிக்அப் வண்டியில் வினாயகர் சிலை கரைக்கவேண்டி கூணான்டியூர் கீரைக்காரனூர் சென்று சிலையை கரைத்துவிட்டு பிறகு திரும்ப மேச்சேரி நோக்கி வந்தபோது , உப்புபள்ளம் என்ற இடத்தில் எதிரி அதிவேகமான வண்டியை ஓட்டியதால், நாங்கள் கத்திய பின்னரும் நிறுத்தாமல் வேமகமாக சென்ற இடது பக்கமாக கவிழ்த்துவிட்டதால் விபத்து ஏற்பட்டது.

2. விபத்தின் காரணமாக எனக்கு கை கால் முதுகு தோள்பட்டை முட்டி ஆகிய பகுதிகளில் காயம் எற்பட்டது. இந்த விபத்தில் கார்த்தி மற்றும் ராஜ்குமார் என்பவருக்கும் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் சேலம் தனியார் மருததுவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். இந்த விபத்திற்கு ஓட்டுனர் மயில்சாமி என்பவர் தான் என்பதை தெரிந்து கொண்டேன். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை வி'சாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3. சரக்கு வாகனத்தில் பயணம் செய்யக்கூடாது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் 18 பேர் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. ஓட்டுனர் மிதமான வேகத்தில் சென்றார்கள் என்றும் நாங்கள் அதிகபடியாக ஏறியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த பகுதி வளைவான பகுதியா என்றால் இல்லை. அது இறக்கமான பகுதிய என்றால் ஆமாம். நாங்கள் பின்னல் இருந்ததால் ஓட்டுனர் வசம் சொல்வதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வாகனத்தில் நெறிசலாக பயணம் செய்தோம் என்றால் ஆமாம். சரவணன் என்பவர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவரது உறவினர் வருகிறார் என்று அவர் எட்டி குதித்தபோது வண்டியில் இருந்த அனைவரும் ஒரே பக்கமாக சென்று நின்ற நிலையில் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. நான் சாலையை பார்க்கவாய்ப்பில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.11** **Date : 12.04.2024**

| | |
|---|---|
| **Name : பிரகாஷ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குறுக்கத்தியான் வளவில் குடியிருந்து தறி வேலை செய்கிறேன். கடந்த 05.09.2016 தேதி அன்று மாலை 04.00 மணிக்கு மேல் நான் உட்பட 18 பேர் பிக்அப் வண்டியில் வினாயகர் சிலை கரைக்கவேண்டி கூணான்டியூர் கீரைக்காரனூர் சென்று சிலையை கரைத்துவிட்டு பிறகு திரும்ப மேச்சேரி நோக்கி வந்தபோது , உப்புபள்ளம் என்ற இடத்தில் எதிரி அதிவேகமான வண்டியை ஓட்டியதால், நாங்கள் கத்திய பின்னரும் நிறுத்தாமல் வேமகமாக சென்ற இடது பக்கமாக கவிழ்த்துவிட்டதால் விபத்து ஏற்பட்டது.

2. விபத்தின் காரணமாக எனக்கு தலையில் காயம் ஏற்ப்டடது தையல் போடப்பட்டு சிகிச்சை அளிக்கப்ப்டடது. இந்த விபத்தில் கார்த்தி மற்றும் ராஜ்குமார் என்பவருக்கும் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். . இந்த விபத்திற்கு ஓட்டுனர் மயில்சாமி என்பவர் தான் என்பதை தெரிந்து கொண்டேன். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3. சரக்கு வாகனத்தில் பயணம் செய்யக்கூடாது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நாங்கள் 18 பேர் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. ஓட்டுனர் வேண்டுமென்று விபத்தை ஏற்பட்டுத்த மாட்டார் என்றால் அவ்வாறு இல்லை. நிதானம் இல்லாமல் சென்றதால் விபத்து ஏற்பட்டது. விபத்து நடந்த பகுதி வளைவான பகுதியா என்றால் இல்லை. அது இறக்கமான பகுதிய என்றால் இல்லை. நாங்கள் பின்னல் இருந்ததால் ஓட்டுனர் வசம் சத்தம் போட்டோமா என்றால் இல்லை. நாங்கள் அனைவரும் அமர்ந்துதான் பயணம் செய்தோம் என்றால் ஆமாம். வாகனத்தில் நெறிசலாக பயணம் செய்தோம் என்றால் இல்லை. சரவணன் என்பவர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவரது உறவினர் வருகிறார் என்று அவர் எட்டி குதித்தபோது வண்டியில் இருந்த அனைவரும் ஒரே பக்கமாக சென்று நின்ற நிலையில் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. வண்டியை ஓரமாக நிறுத்த சொன்னோமா என்றால் நிறுத்த சொல்லி சத்தம்போட்டோம். நாங்கள் சத்தம் போட்டது ஓட்டுனருக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.12** **Date : 12.04.2024**

| | |
|---|---|
| **Name : ஏழுமலை** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொம்மையன் காட்டில் குடியிருந்து வருகிறேன். விபத்து நடந்தபோது நான் பிக்அப் வேனில் பயணம் செய்தேன். வேகமாக சென்றபோது ஓட்டுனர் பிக்அப் வேனை கவிழ்த்தால் விபத்து ஏற்ப்டடது. தேதி மாதம் எனக்கு தெரியாது.

2. விபத்தின் காரணமாக எனக்கு காது, கை தலையில் காயம் ஏற்ப்டடது இந்த விபத்தில் கார்த்தி மற்றும் ராஜ்குமார் என்பவருக்கும் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். இந்த விபத்திற்கு ஓட்டுனர் மயில்சாமி என்பவர் தான் என்பதை தெரிந்து கொண்டேன். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3. சரக்கு வாகனத்தில் பயணம் செய்யக்கூடாது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் 8 பேர் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. ஓட்டுனர் வேண்டுமென்று விபத்தை ஏற்பட்டுத்த மாட்டார் என்றால் அவ்வாறு இல்லை. விபத்து நடந்த பகுதி வளைவான பகுதியா

என்றால் இல்லை. அது இறக்கமான பகுதிய என்றால் இல்லை. நான் மயக்கம் அடைந்ததால் என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/—தே.மயில்சாமி,
குற்றவியல் நீதித்துறை எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.13** **Date : 12.04.2024**

| | |
|---|---|
| **Name : மாதேஷ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குறுக்கத்தியான் வளவில் குடியிருந்து கட்டிட வேலை செய்கிறேன். கடந்த 2016 ம் வருடம் மாலை 04.00 மணிக்கு மேல் நான் உட்பட 18 பேர் பிக்அப் வண்டியில் வினாயகர் சிலை கரைக்கவேண்டி கூணான்டியூர் கீரைக்காரனூர் சென்று சிலையை கரைத்துவிட்டு பிறகு திரும்ப மேச்சேரி நோக்கி வந்தபோது, உப்புபள்ளம் என்ற இடத்தில் எதிரி அதிவேகமான வண்டியை ஓட்டியதால், இடது பக்கமாக கவிழ்த்துவிட்டதால் விபத்து ஏற்பட்டது.

2. விபத்தின் காரணமாக எனக்கு கால் மற்றும் நெற்றியில் காயம் ஏற்பட்டது . இந்த விபத்தில் கார்த்தி மற்றும் ராஜ்குமார் என்பவருக்கும் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். இந்த விபத்திற்கு ஓட்டுனர் மயில்சாமி என்பவர் தான் என்பதை தெரிந்து கொண்டேன். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3. நாங்கள் 18 பேர் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால்

இல்லை. சரக்கு வாகனத்தில் பயணம் செய்யக்கூடாது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஓட்டுனர் வேண்டுமென்று விபத்தை ஏற்பட்டுத்த மாட்டார் என்றால் அவ்வாறு இல்லை. விபத்தின் காரணமாக ஓட்டுனருக்கம் காயம் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்க தெரியாது. விபத்து நடந்த பகுதி வளைவான பகுதியா என்றால் வளைவை தாண்டி நேரான பகுதி. அது இறக்கமான பகுதிய என்றால் ஆமாம். சரவணன் என்பவர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவரது உறவினர் வருகிறார் என்று அவர் எட்டி குதித்தபோது வண்டியில் இருந்த அனைவரும் ஒரே பக்கமாக சென்று நின்ற நிலையில் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. வளைவான பகுதியை தாண்டியவுடன் அனைவரும் ஒரு புறத்தில் சென்றபோது விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. நான் உட்கார்ந்திருந்ததால் ரோட்டை பார்க்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் அதிகபடியான நபர்கள் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.14** **Date : 12.04.2024**

| | |
|---|---|
| **Name : சகிலா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குறுக்கத்தியான் வளவில் குடியிருந்து 10 ம் படித்து வருகிறேன். கடந்த 2016 ம் வருடம் மாலை 04.00 மணிக்கு மேல் நான் உட்பட 18 பேர் பிக்அப் வண்டியில் வினாயகர் சிலை கரைக்கவேண்டி கூணான்டியூர் கீரைக்காரனூர் சென்று சிலையை கரைத்துவிட்டு பிறகு திரும்ப குறுக்கத்தியன் வளைவு நோக்கி வந்தபோது, எதிரி வேகமான வண்டியை ஓட்டியதால், இடது பக்கமாக கவிழ்த்துவிட்டதால் விபத்து ஏற்பட்டது.

2. விபத்தின் காரணமாக எனக்கு கை, கால் காயம் ஏற்ப்டடது . இந்த விபத்தில் கார்த்தி மற்றும் ராஜ்குமார் என்பவருக்கும் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். விபத்திற்கு பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக தனியார் மருத்துவமனைக்கு சென்று 40 நாட்கள் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றேன். இந்த விபத்திற்கு ஓட்டுனர் மயில்சாமி என்பவர் தான் என்பதை தெரிந்து கொண்டேன். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3. விபத்து பற்றி எனக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியாது. விபத்து பற்றி எனக்க யாராவது சொல்லி கொடுத்தார்களா என்றால் இல்லை. நாங்கள் 18 பேர் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் தெரியாது. சரக்கு வாகனத்தில் பயணம் செய்யக்கூடாது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு வரை படிக்கிறேன். நாங்கள் அதிகபடியான நபர்கள் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.
மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.15** **Date : 12.04.2024**

| | |
|---|---|
| **Name : செல்வம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குறுக்கத்தியான் வளவில் குடியிருந்து தறி வேலை செய்து வருகிறேன். கடந்த 2016 ம் வருடம் மாலை 04.00 மணிக்கு மேல் நான் உட்பட 18 பேர் பிக்அப் வண்டியில் வினாயகர் சிலை கரைக்கவேண்டி கூணான்டியூர் கீரைக்காரனூர் சென்று சிலையை கரைத்துவிட்டு பிறகு திரும்ப உப்புபள்ளம் என்ற இடத்தில் வரும்போது விபத்து ஏற்பட்டது. வண்டி அங்கும் இங்குமாக சென்றபோது விபத்து ஏற்பட்டது. நான் வண்டியில் பின்னால் நடு பகுதியில் உட்கார்ந்து பயணம் செய்தேன். எதிரி வேகமான வண்டியை ஓட்டியதால், வலது பக்கமாக கவிழ்த்துவிட்டதால் விபத்து ஏற்பட்டது.

2. விபத்தின் காரணமாக எனக்கு கைமுட்டியில் காயம் ஏற்ப்டடது . இந்த விபத்தில் கார்த்தி மற்றும் ராஜ்குமார் என்பவருக்கும் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். விபத்திற்கு பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக அரசு மருத்துவமனைக்கு சென்று பிறகு தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். இந்த விபத்திற்கு ஓட்டுனர் மயில்சாமி என்பவர் தான் என்பதை தெரிந்து கொண்டேன். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை

செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

3. நாங்கள் 18 பேர் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. யார் தவறால் விபத்து நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது நான் தூங்கிவிட்டேன். நாங்கள் அதிகபடியான நபர்கள் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.விபத்து எவ்வாறு நடைபெற்றது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.16** **Date : 12.04.2024**

| | |
|---|---|
| **Name : செல்வராஜ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குறுக்கத்தியான் வளவில் குடியிருந்து தறி வேலை செய்து வருகிறேன். கடந்த 05.09.2016 ம் தேதியன்று மாலை 04.00 மணிக்கு மேல் நான் உட்பட 18 பேர் பிக்அப் வண்டியில் வினாயகர் சிலை கரைக்கவேண்டி கூணான்டியூர் கீரைக்காரனூர் சென்று சிலையை கரைத்துவிட்டு பிறகு திரும்ப உப்புபள்ளம் என்ற இடத்தில் வரும்போது விபத்து ஏற்பட்டது. ஓட்டுனர் வேகமாக வண்டியை ஓட்டியதால், இடது பக்கமாக கவிழ்த்துவிட்டதால் விபத்து ஏற்பட்டது.

2. விபத்தின் காரணமாக எனக்கு கை, கால் இடுப்பு , தலை ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டது . இந்த விபத்தில் கார்த்தி மற்றும் ராஜ்குமார் என்பவருக்கும் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். விபத்திற்கு பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக அரசு மருத்துவமனைக்கு சென்று 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். இந்த விபத்திற்கு ஓட்டுனர் மயில்சாமி என்பவர் தான் என்பதை தெரிந்து கொண்டேன். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3. நாங்கள் அதிகபடியான நபர்கள் பயணம் செய்ததால் தான் வண்டி கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் ஓட்டுனர் வேகமாக செல்கிறீர்கள் என்று எச்சரிக்கை செய்தேனா என்றால் செய்தேன். நாங்கள் 18 பேர் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. நாங்கள் அதிகபடியான நபர்கள் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து எவ்வாறு நடைபெற்றது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஓட்டுனர் மிதமான வேகத்தில் தான் சென்றார் என்றால் இல்லை. நாங்கள் 18 பேரும் ஆடிக்கொண்டு சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**